கந்தகத் திணை

# கதைப்பாடல்

மின் - நூல்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.tamilacademy.com www.kids.noolagam.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

(பன்னாட்டுக் குழந்தைகளுக்கு இணையம் வழித் தமிழ் கற்பிக்கும் நிறுவனம்)

சிவகாசி

மற்றும்

# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

சிவகாசி – 626 124


இணைந்து உருவாக்கும்

மின்-நூல் **(E-book)**

# கந்தகத் திணை

(புதியதோர் உலகம் செய்வோம்)

**(2015 - 2016)**

# கதைப்பாடல்


**ப. கணேஷ்வரி**

**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை**

# குறுகத் தறித்த குறளாய்...

தமிழன் வீட்டுச் சமையலறையில் குறுகத் தறித்த குறள் போல அஞ்சறைப் பெட்டியில் பூத்திருக்கும் குறுமைப் பொருள் மிளகு – மிளகு என்றவுடன் அதன் காரத்தன்மை நாவிலிருந்து காது வரை நீள்கிறது. இனிப்புப் பொருள்களுக்கு இச்சை கொள்ளும் குழந்தைகள் கார்ப்புப் பொருள்களைக் கண்டு காத தூரம் ஓடுகின்றனர். மிளகினை உண்ண வேண்டிக் கண்ணன் என்னும் சிறுவனை ஆற்றுப்படுத்தும் தாயின் குரல் கதைப்பாடல் வடிவிலே ஒலிக்கின்றது. இக்கதைப் பாடல் மிளகினை உண்ணாத சிறார்களுக்கு மட்டும் அல்ல பெரியோர்களுக்கும் ஒரு படிப்பினையை அன்போடு புகட்டுகின்றது.

குறுகத் தறித்த குறள் போல் எண்ணற்ற மருத்துவப் பயன் விளைக்கும் மிளகினை இலக்கிய உணவாய் உண்போம். ‘கதைப்பாடல்’ மின் – நூலாய் ஆக்கம் பெற வழிகோலிய கல்லூரி நிர்வாகத்தாருக்கு இதயம் கனிந்த நன்றி.

மாணவர்களை ஊக்கப்படுத்தும் கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை. அய்யன் கோடீஸ்வரன்** அவர்களுக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்திடும் கல்லூரி தாளாளர் மேன்மைமிகு **கி. அபிரூபன்** அவர்களுக்கும் கந்தகத்திணையின் இதயம் கனிந்த நன்றி.

புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் **வ. பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ. அசோக்** அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.

மாணவக் குழந்தைக் கவிஞரை மீட்டெடுத்த பெருமிதத்தில் அமெரிக்காவில் தமிழ் இதயத்தோடு வாழ்ந்து வரும் **உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர் திரு. இரா. வெங்கடேஷ்,** B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்குக் கந்தகத் திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது. தன் வரைகலையால் ( Graphic ) பாடல்களுக்கு படம்வழி உயிரூட்டிய மாணவர் ம. பழனிக்குமார் (III MCA) அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி. பாப்பா பாக்கள் மழலைகளின் நாவில் மலரட்டும்! தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் பன்னாட்டு உறவை இணைக்கட்டும்!

முனைவர் **ந. அருள்மொழி,**
**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,**
ஒருங்கிணைப்பாளர், **கந்தகத்திணை.**

# பொருளடக்கம்


| வ. எண் | படைப்பு | படைப்பாளர் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மிளகு | ப.கணேஷ்வரி | 1 |

# மிளகு



காலை உணவு உண்ண வேண்டி
கவலையாய்க் கண்ணன் அமரவே
நெய்யுமிட்ட நிலா போன்ற
பொங்கல் வந்தது தட்டிலே,
அம்மா வைத்த பொட்டுப் போல
திருஷ்டிப் பொட்டாய் மிளகுமே
பளபளத்த பொங்கலிலே
பாங்காய் எங்கும் கிடந்ததாம்.

ஒன்றொன்றாய் மிளகை எடுத்து
ஓட விட்டான் தரையிலே.
'கண்ணா' என்று அதட்டிக் கொண்டு
கருப்புப் பொன்னின் (மிளகு) கதை சொன்னாள்.

மிளகின் அருமை தெரிந்த யாரும்
மிளகை ஒதுக்க மாட்டார்கள்.
நல்ல கண்ணன் நீயுமே
நலமாய்க் கருத்தைக் கேட்டிடு.



கொத்துக் கொத்தாய் காய்க்குமாம்
கொடி கொடியாய் வளருமாம்
கொள்ளை மணம் கொண்டதாம்
சுள்ளெனும் உறைப்புக் கொண்டதாம்.

உறைப்பை நாமும் சேர்த்திட்டால்
வயிறு புண்ணாய் ஆகாதா?
கேள்வி கேட்ட கண்ணனுக்கு
எடுத்துச் சொன்னாள் இப்படி.



உறைப்பு என்பது அதன் குணம்
உண்மையில் அது தான் மருத்துவம் - இதை
உணவில் கலந்து உண்ணவே
உடலின் வாயுவைப் போக்குமாம்
விட்டு விட்டு வரும் சுரத்தையும்
விரட்டி அடிக்கச் செய்யுமாம்
என்று அம்மா கூறவே
ஏற இறங்கப் பார்த்திட்டான்.

இன்னும் சிறப்பை அறியவே
இனிதாய் அம்மாவை நோக்கினான்.



அடுத்தடுத்து அம்மாவும்
அதன் பெருமை கூறினாள்.
வெள்ளையரும் நம் நாட்டை
விரைவாய்க் கைப் பிடிக்கவே
விளைந்த முதற் காரணம்
வீர சேர நாட்டின் மிளகு தான்
என்று சொன்ன பொழுதிலே
வியப்பாய்க் கண்ணை உருட்டினான்.

தமிழ்நாட்டில் இதைத் தான்
கருங்கறி, கருப்புப் பொன் என்பார்கள்.
வட நாட்டில் இதனைத் தான்
யவனப் பிரியா என்பார்கள்

அம்மா சொன்ன பெயரையும்
அசந்து கேட்ட கண்ணனும்
மருத்துவமும் கேட்டிட்டான்.

திராட்சை ரசத்தில் இதைத்தான்
சேர்ந்துடனே கலக்கியே
சித்த வைத்தியரும் கொடுப்பாராம்.
நாட்டு மருத்துவரும் இதனைத்தான்
நஞ்சு முறிக்க எடுப்பாராம்
பத்து மிளகு இருந்திட்டால்
பகைவன் வீட்டிலும் உண்ணலாம்
எழிலாய்ச் சொன்ன அம்மாவிற்கு
எட்டி முத்தம் கொடுத்திட்டான்.

குட்டிக் குட்டிக் கதைகள் கேட்டு
குதூகலித்த கண்ணனும்
குறு மிளகின் கதையைக் கேட்டு
குதித்து ஓடித் திரிந்திட்டான்.



**ப . கணேஷ்வரி,**
**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்.**

# நன்றி

